இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 09.09.2026

# கொளத்தூர் வழக்கு எழுப்பிய கேள்விகள்!

கொளத்தூர் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் வெற்றி பெற்றது செல்லாது என்று அறிவிக்கக் கோரி தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டாலும், அந்த வழக்கு எழுப்பிய கேள்விகள் இன்னமும் பதில் சொல்லப்படாமல் அப்படியே இருக்கின்றன.

தி.மு.க. தலைவர் சார்பில் இரண்டு ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அவை விசாரணைக்கு வந்தன. இதில் ஒரு மனுவைதான் உயர் நீதி மன்றம் தள்ளுபடி செய்தது.

**இது குறித்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளரும் மூத்த வழக்கறிஞருமான என்.ஆர்.இளங்கோ வெளியிட்டுள்ள அறிக்கையில், "வழக்கின் தீர்ப்பு எப்படி வந்தாலும், தேர்தல் ஆணையம் மற்றும் வாக்குப் பதிவு இயந்திரங்களில் உள்ள குறைப்பாட்டை நாம் அனைவருக்கும் எடுத்துச் சொல்லவும், முறையாகப் பதிவு செய்யவும் இந்த முன்னெடுப்பை செய்யாமல் விடக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்ததின் அடிப்படையில், தலைவர் தந்த ஒப்புதலால் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன" என்று குறிப்பிட்டுள்ளார். இதுவே முழு உண்மை ஆகும். வாக்குப்பதிவு இயந்திரத்தில் உள்ள குறைபாடு தொடர்பாக எழுப்பிய கேள்விகளுக்கு நீதிமன்றம் உரிய பதிலை அளிக்கவில்லை.**

"ஒருவேளை அனைத்து வாக்குப்பதிவு இயந்திரங்களையும் சரிபார்க்க வேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டாலும் கூட அது தொடர்பாக தேர்தல் வழக்கில்தான் கோரமுடியும். மனுதாரரின் கோரிக்கையை ஏற்றால் தேர்தலில் 2, 3 இடங்களைப் பிடித்தவர்கள் தேர்தல் வழக்குகளை தொடர்வதற்குப் பதிலாக இதுபோல ரிட் வழக்குத் தொடர வாய்ப்பாக அமைந்துவிடும். இந்த வழக்கில் வாக்குப்பதிவு இயந்திரங்களின் சரிபார்ப்புப் பணிகளின் உண்மைத் தன்மை தொடர்பான குற்றச்சாட்டுகளை ஆராய முடியாது" என்று உயர்நீதிமன்றம் சொல்லி இருக்கிறது.

**'குற்றச்சாட்டுகளை ஆராய முடியாது' என்று சொல்லி இருக்கிறார்களே தவிர, 'குற்றச்சாட்டுகள் தவறானவை' என்று சொல்லவில்லை.**

**கொளத்தூர் தொகுதியைப் பொறுத்தவரையில் தி.மு.க. சட்டத்துறை சார்பில் வாக்குப்பதிவு இயந்திரங்களை சரிபார்க்க வலியுறுத்தப் பட்டது. இவை ஆராயப்பட்டது. அப்போது பல்வேறு தவறுகள் நடந்துள்ளது என்பது கண்டறியப்பட்டது. இதனை சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ ஊடகங்களுக்கு அறிவித்தார்.**

* 29.07.2026- முதல் 05.08.2026 வரை Checking and Verification நடைபெற்றது. 14 தேர்ந்தெடுக்கப்பட்ட கருவிகளில் சோதனையில் 5 கருவிகள் செயல்படவில்லை.

* கொளத்தூர் தொகுதியில் பரிசோதிக்கப்பட்ட இயந்திரங்களில் 30 விழுக்காட்டுக்கும் அதிகமானவற்றில் கடுமையான கோளாறுகளும், சீல் வைப்பதில் முறைகேடுகளும் உள்ளன.

* தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் பெயர் இருந்த வாக்கு செலுத்தும் கருவி (Ballot Unit)-ஐ வாக்குப்பதிவு இயந்திரத்தில் (Control Unit) அடையாளம் காண இயலவில்லை.

* ஒரு வாக்கு இயந்திரத்தில் பாதுகாப்பு சீல்கள் புதியவையாக நிரப்பப்படாமல் இருந்தது.

* வாக்குச்சாவடி 157 இல் நான்கு இயந்திரங்களிலும் இருந்த 7 முகவரி அட்டைகளும் எந்த விவரமும் எழுதப்படாமல் காலியாக புத்தம் புதிய அட்டைகளாக ஒட்டப்பட்டு இருந்தன. எழுதப்பட்ட விவரங்கள் மறைந்து விடக் கூடாது என்பதற்காக முகவரி அட்டையின் பின்புறத்தான் அரக்கு முத்திரை வைக்க வேண்டும். ஆனால் இங்கு விவரங்களே எழுதப்படாத காலியான அட்டையின் முன் பக்கத்தில் அரக்கு முத்திரை வைக்கப்பட்டிருந்தது.

* இரண்டு அரக்கு முத்திரைகள் இருக்க வேண்டும். இரண்டு அரக்கு முத்திரைகள் இல்லை.

* வழக்கமாக ஒவ்வொரு இயந்திரமும் சீல் வைக்கப்பட்டு, அதன் மீது address tag என்கிற காகிதம் ஒட்டப்பட்டிருக்கும். அதில் எண்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். வாக்குச்சாவடி எண் 75-இல் வாக்குப்பதிவு செலுத்தும் இரண்டு யூனிட்களில் எண்கள் மாறியிருந்தன.

* வாக்குப்பதிவு இயந்திரங்கள் முறையாகப் பாதுகாக்கப்படவில்லை அல்லது பாதுகாப்பு நடைமுறைகள் சரியாகப் பின்பற்றப்படவில்லை என்பது அறிவியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் எங்களுக்குத் தெளிவாகியுள்ளது. எனவே, இந்தத் தேர்தல் முறையான தேர்தல் அல்ல என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இவை அனைத்தும் தி.மு.க. சட்டத்துறை எழுப்பிய கேள்விகள் ஆகும். இதுகுறித்து தேர்தல் ஆணைய அதிகாரியிடம் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ கேள்வி எழுப்பினார். பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்துக்கு 19 கேள்விகளை எழுதிக் கொடுத்துள்ளது தி.மு.க. சட்டத்துறை. இந்தப் பழுதுகளை குறித்து உச்ச நீதிமன்றத்தின் ஆணையின்படி விளக்கங்களை முறையாக, முழுமையாக இதுவரை யாரும் தரவில்லை.

**இவை அனைத்தும் கண்டறியப்பட்ட தவறுகள் ஆகும். நடந்துள்ள முறைகேடுகள் ஆகும். இக்கேள்விகள் இன்னமும் பதில் சொல்லப்படாமல் அப்படியே இருக்கின்றன. இதுபோல இன்னும் எவ்வளவோ நடந்திருக்கலாம். இதுபோல இன்னும் எத்தனையோ தொகுதியில் நடந்திருக்கலாம். இவற்றுக்கு தேர்தல் ஆணையம் பதில் சொல்ல வேண்டாமா? இந்த முறைகேட்டை ஆய்வு செய்ய வேண்டாமா தேர்தல் ஆணையம்?**

**'மக்களின் தீர்ப்பே இறுதியானது' என்பதை, 'இயந்திரங்களின் தீர்ப்பே இறுதியானது' என்று மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்ற சந்தேகத்தைத்தான் கொளத்தூர் வழக்கு எழுப்புகிறது.**

●●

## அமலாக்கத்துறை குற்றச்சாட்டுகளை

# 'பிரிண்ட் அவுட்' எடுத்து வந்து படிக்க 3 நாட்கள் எதற்கு?

## முதல்வருக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, செப். 9 - "அமலாக்கத்துறை குற்றச்சாட்டுகளை பிரிண்ட் அவுட் எடுத்து வந்து படிக்க 3 நாட்கள் எதற்கு?" என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதல்வர் விஜய்க்கு கேள்வி எழுப்பினார்.**

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-



**அமலாக்கத்துறை குற்றச்சாட்டுகளை பிரிண்ட் அவுட் எடுத்து வந்து படிக்க 3 நாட்கள் எதற்கு?**

**பதிலற்ற பதிலுரை பழி போடும் பேச்சு diversion tactics மொத்தத்தில் எந்த preparationம் இல்லாமல், Roll Camera, Action model Cringe டயலாக் பேசி இருக்கிறார் dummy CM.**

**எதிர்க்கட்சியின் பதிலைக் கேட்க பயந்து மீண்டும் ஓளியாமல், prepare well next time.Try to do better!**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## ஊழலைப்பற்றி பேசும் உத்தமரே – ஊரெங்கும் நடைபெறும்

# கொலைகளுக்கும் அமலாக்கத்துறைக்கும் என்ன தொடர்பு?

## முதலமைச்சர் விஜய்க்கு தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

**சென்னை, செப். 9 - ஊழலைப்பற்றிப் பாடம் எடுக்கும் உத்தமரே! ஊரெங்கும் நடக்கும் கொலைகளுக்கும் அமலாக்கத்துறைக்கும் என்ன தொடர்பு? என தயாநிதி மாறன் காட்டமான கேள்வியை எழுப்பியுள்ளார்.**



மேலும் அவர் தெரிவித்ததாவது:-

அமலாக்கத்துறையில் அதிக வழக்குகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் கட்சியோடு கூட்டணி வைத்திருப்பது யாா்? அரசியல் காரணமாக அவர்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு ஆவணங்களை யும் முதலமைச்சர் அடுத்த முறை வாசிப்பாரா?

உலக நாடுகள் முன்னிலையில் இந்தியாவுக் குப் பெருமை தேடித் தந்தவர் என் தந்தை மறைந்த முரசொலி மாறன். வல்லரசு நாடுகளுடன் வாதிட்ட வல்லமையாளர். உள்ளூர் பத்திரிகையாளர்களைச் சந்திக்கவே அஞ்சும் ஒரு முதலமைச்சர் மரியாதைக்குரிய முரசொலி மாறன் அவர்களைப் பற்றிப் பேசலாமா? இன்று அவரைக் கொச்சைப்படுத்தும் முதலமைச்சர் அவர்கள், அதே முரசொலி மாறனின் மகனான எனது அழைப்பை ஏற்று, ஜனவரி 2006 இல், அப்போதைய பிரதமர் டாக்டர்.மன்மோகன் சிங் தலைமையில் நடைபெற்ற, "பொங்கல் சிறப்பு தபால் தலை" வெளியிடும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவிருந்த சமயத்தில்,

விஜய் மீது வருமான வரி வழக்கு நிலுவையில் உள்ளதால், அஞ்சல் தலை வெளியீடு நிகழ்ச்சியில் விஜய் அவர்களை மேடையில் ஏற்றக் கூடாது என காங்கிரஸ் கட்சியை சேர்ந்த, அப்போதைய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எதிர்ப்பினை கடுமையாக தெரிவித்தபோது, உடனடியாக அதற்கு ஆட்சேபனையைத் தெரிவித்து, விஜய் அவர்களை மேடையில் நிற்க வைத்து, தபால் தலையை பெறுவதற்கான உரிய மரியாதையை வாதாடி அவருக்கு பெற்றுத் தந்தது முரசொலி மாறன் மகன் தானே?

அந்த தபால் தலையை பெற்றுக் கொண்டு சிரித்த போது, இப்போதைய ஞானோதயம் இல்லாமல் ஞானசூனியமாக இருந்தாரா?

முதலில், ஊழலைப் பற்றியோ மிசாவைப் பற்றியோ பேசும் அருகதை இந்த முதலமைச்சருக்கு உள்ளதா?

போர்பந்தரில் பிறந்தவரின் வாரிசாக தன்னைத் தானே யாரும் நினைத்துக் கொள்ளக்கூடாது. இந்த வீராதி வீரர் கொடநாட்டில் தனது திரைப்படத்திற்காக, ஒருநாள் முழுவதும் அங்கேயே காத்திருந்து, வீடியோவில் கைகட்டி வாய்பொத்தி முனகியதையும் மறந்து விடலாகாது.

கேட்ட கேள்விக்கு பதில் சொல்லத் தெரியவில்லை என்றால் இப்படித்தான் ஆகஸ்ட் 2026 இல் நடந்த கொலைகளுக்கு எமெர்ஜென்சி காலத்தில் அமைக்கப்பட்ட சர்க்காரியா ஆணைய அறிக்கையில் பதில் தேட வேண்டியிருக்கும்!

தேடி முடிக்கும் முன் அடுத்த கொலைகள் நடந்தேறிச் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது!

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில் ஆண்டிபட்டியில்

# தறியே இல்லாமல் உற்பத்தி செய்ததாக கணக்கு காட்டி பல கோடி ரூபாய் மோசடி!

தேனி, செப். 9 - தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஜக்கம்பட்டி மற்றும் டி.சுப்புலாபுரம் பகுதிகளில் கைத்தறி இல்லாமலேயே, இருப்பதாக போலியாக கணக்கு காட்டி, நெசவாளர்கள் பெயரில் பல கோடி ரூபாய் மோசடி நடந்துள்ளதாக புகார் எழுந்துள்ளது. நேர்மையான அதிகாரிகள் இருக்கும் நேர்மையான ஆட்சியில் இது எப்படி கண்டுகொள்ளாமல் இருந்து வருகிறது என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.


**100க்கும் மேற்பட்ட தறிகள் இயங்கிய பகுதி:**

ஆண்டிபட்டி, டி.சுப்புலாபுரம் பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட கைத்தறி மற்றும் பிடல் தறி இயங்கி வந்தன. நூற்றுக்கணக் கான குடும்பங்கள் இதனை நம்பி வாழ்ந்து வந்தன.

**தறி இல்லாமல் உற்பத்தி செய்த தாக மோசடி:**

ஆனால் மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில் நடந்ததாக கூறப்படும் மோசடியில், உண்மையில் கைத்தறி,

## அதிகாரிகள் கண்டுகொள்ளாதது ஏன்?



பிடல் தறி இல்லாத நபர்கள், தங்கள் வீட்டில் தறி இருப்பதாகவும், துணி உற்பத்தி செய்வதாகவும் போலி ஆவணங்கள் தயாரித்துள்ளனர்.

உற்பத்தியே செய்யாமல், உற்பத்தி செய்ததாக கணக்கு காட்டி, அரசிடம் இருந்து நூல் மானியம், ஊக்கத்தொகை, இலவச மின்சார மானியம், கூட்டுறவு சங்க கடன் தள்ளுபடி என ஒரு நபருக்கு லட்சக்கணக்கில் பணம் பெறப்பட்டுள்ளது.

இப்படி பல நபர்கள் மூலம் பல கோடி ரூபாய் அரசு பணம் சுருட்டப்பட்டுள்ளதாக நெசவாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

**நேர்மையான அதிகாரிகள் கண்டுகொள்ளாதது ஏன்?**

தமிழகத்தில் நேர்மையான ஆட்சி நடைபெற்று வருவதாகவும், மாவட்டத்தில் நேர்மையான அதிகாரிகள் பணியாற்றி வருவதாகவும் கூறப்படும் நிலையில், இவ்வளவு பெரிய மோசடி எப்படி கண்டுகொள்ளாமல் விடப்பட்டது என்பது பொது மக்களின் கேள்வியாக உள்ளது.

கைத்தறி துறை அதிகாரிகள் முறையாக கள ஆய்வு செய்திருந்தால், தறி இல்லாத இடத்தில் தறி இருப்பதாகவும், உற்பத்தி இல்லாத இடத்தில் உற்பத்தி நடப்பதாகவும் காட்டப்பட்ட போலி கணக்குகள் வெளிச்சத்திற்கு வந்திருக்கும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

**கோரிக்கை:**

எனவே இது குறித்து மாவட்ட ஆட்சியர் நேரடியாக தலையிட்டு, ஆண்டிபட்டி, டி.சுப்புலாபுரம் பகுதியில் உள்ள ஒவ்வொரு நெசவாளர் வீட்டிற்கும் சென்று தறி உள்ளதா? உண்மையில் உற்பத்தி நடக்கிறதா? என ஆய்வு செய்ய வேண்டும்.

போலியாக பணம் பெற்றவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அந்த பணத்தை மீட்டு உண்மையான நெசவாளர்களுக்கு வழங்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

## முதல்வரின் பதிலுரை மீது பேச அனுமதி மறுப்பு!

# பேரவைத் தலைவரின் ஒருதலைபட்சமான நடவடிக்கை!

## கண்டித்து கழக எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு!

சென்னை, செப். 9 - முதல்வர் விஜயின் பதிலுரை குறித்து பேச சபாநாயகர் அனுமதி மறுத்ததைக் கண்டித்து தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

முதல்வர் விஜயின் பதிலுரை முடிந்ததும், அதன் மீது எதிர்க்கட்சித் தலைவரை பேச அனுமதி வழங்க வேண்டும் என தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் வலியுறுத்தினர். ஆனால், இதனை ஏற்க சபாநாயகர் மறுத்துவிட்டார். சபாநாயகரின் ஒருதலைபட்சமான முடிவைக் கண்டித்து தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் முழக்கமிட்டனர். சபாநாயகரின் இருக்கை முன்பு அமர்ந்து தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் தர்ணாவில் ஈடுபட்டனர்.

பின்னர், தி.மு.க. உறுப்பினர்கள் சபாநாயகரின் செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவையில் இருந்து அவர்கள் வெளிநடப்பு செய்தனர். சபாநாயகரின் செயல், ஜனநாயகப் படுகொலை என தி.மு.க. உறுப்பினர்கள் முழக்கமிட்டனர்.